தினத் தந்தி
DAILY THANTHI
சென்னை (4-9-2016) ஞாயிற்றுக்கிழமை
மலர் 74 இதழ் 307
வெல்க தமிழ்
துன்முகி ஹு ஆவணி மீ 19 உ
ஹிஜிரி 1437 துல்ஹஜ் 1



சென்னை ஈஞ்சம்பாக்கத்தில் உள்ள வி.ஜி.பி. பொழுதுபோக்கு பூங்காவில் இயற்கை வேளாண் தோட்ட திருவிழாவை இரா.கண்ணன் ஆதித்தன் தொடங்கி வைத்தபோது எடுத்த படம். அருகில் வி.ஜி.பி. குழுமத்தலைவர் வி.ஜி.சந்தோசம், வி.ஜி.பி. ரவிதாஸ், மரியஸீனா ஜான்சன் மற்றும் பலர் உள்ளனர்.

### வி.ஜி.பி. பொழுதுபோக்கு பூங்காவில்

# இயற்கை வேளாண் தோட்ட திருவிழா

## இரா.கண்ணன் ஆதித்தன் தொடங்கி வைத்தார்

சென்னை, செப்.4-

சென்னை ஈஞ்சம்பாக்கத்தில் உள்ள வி.ஜி.பி. பொழுதுபோக்கு பூங்காவில் இயற்கை வேளாண் தோட்ட திருவிழாவை 'மாலை முரசு' நாளிதழ் நிர்வாக இயக்குனர் இரா. கண்ணன் ஆதித்தன் தொடங்கி வைத்தார்.

### இயற்கை வேளாண் தோட்ட திருவிழா

வி.ஜி.பி. பாரிஜாதம் அறக்கட்டளை, எஸ்.பி.எஸ். இந்தியா நிறுவனம், ஏ-இசட் வேளாண் தோட்ட நிறுவனம் ஆகியவை இணைந்து சென்னை ஈஞ்சம்பாக்கத்தில் உள்ள பொழுதுபோக்கு பூங்காவில் இயற்கை வேளாண் தோட்ட திருவிழாவை நடத்துகின்றன.

இதன் தொடக்க விழா வி.ஜி.பி. பொழுதுபோக்கு பூங்காவில் நேற்று நடைபெற்றது. விழாவுக்கு வி.ஜி.பி. குழும தலைவரும், தொழில் அதிபருமான வி.ஜி.சந்தோசம் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக 'மாலை முரசு' நாளிதழ் நிர்வாக இயக்குனர் இரா.கண்ணன் ஆதித்தன் கலந்துகொண்டு இயற்கை வேளாண் தோட்ட திருவிழாவை தொடங்கி வைத்தார்.

### 100-க்கும் மேற்பட்ட அரங்குகள்

இயற்கை வேளாண் தோட்ட திருவிழாவில் சமையல் தோட்டம், மாடி தோட்டம் உள்பட இயற்கையை பறைசாற்றும் 100-க்கும் மேற்பட்ட அரங்குகள் இடம்பெற்றுள்ளன. தமிழக அரசின் வேளாண்மை துறையின் அரங்கமும் இடம்பெற்றுள்ளது.

மேலும் இயற்கை வேளாண் உணவு வகைகள், பாரம்பரிய உணவு வகைகள், தொட்டி செடிகள், மண்பானைகள் உள்ளிட்டவையும் இடம்பெற்றுள்ளன.

### கண்காட்சி அரங்கம்

இயற்கை வேளாண்மை தொடர்பாக கருத்தரங்கம் நடத்துவதற்கு, செயல்முறை விளக்கம் அளிப்பதற்கு என்று தனித்தனி அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இது தவிர ஒலி, ஒளி கண்காட்சி அரங்கமும் அமையப்பெற்றுள்ளது.

முன்னதாக சத்தியபாமா பல்கலைக்கழக நிர்வாக இயக்குனர் மரியஸீனா ஜான்சன் இயற்கை வேளாண் தோட்ட திருவிழாவில் குத்து விளக்கேற்றினார். முடிவில் பாரிஜாதம் அறக்கட்டளை செயலாளர் உஷா ராஜ்குமார் நன்றி கூறினார். விழாவில் வி.ஜி.பி. ரவிதாஸ், இயற்கை ஆர்வலர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.